# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 21 ஞாயிற்றுக்கிழமை (06-09-1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 283


# தமிழகத்திலிருந்து ஈழ அகதிகளை மீள அனுப்பும் திட்டம் இழுபறியில்!

## ஐ. நா. தூதரகத் தலையீட்டின் எதிரொலி

சென்னை, செப்டம்பர் 6

விமானங்கள் மற்றும் கப்பல்கள் மூலம் ஈழத்தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்பும் இந்திய அரசின் திட்டத்தில் இழுபறி நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. அகதிகளுக்கான தூதரகம் ஈழ அகதிகளை பலவந்தமாக அனுப்பும் விடயத்தில் தலையிட்டிருப்பதை அடுத்தே —

அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கை மந்த நிலையை அடைந்திருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

ஒரு விமானத்தைக் கூட அகதிகளால் நிரப்பி திருமலைக்கு அனுப்ப முடியாது அதிகாரிகள் திணறுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இதேசமயம், இராமேஸ்வரத்தில் இருந்து கப்பல்மூலம் அகதிகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கையும் நிறுத்தப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாதகல் பகுதி வீடுகள் குண்டினால் தகர்ப்பு?

மாதகல், இளவாலை அளவெட்டிப் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினர் அப்பகுதியில் பல வீடுகளை நேற்றுப் பகல் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட போது எழுந்த சத்தங்கள் யாழ்ப்பாணம் வரை கேட்டன.

அப்பகுதியில் இருந்து சூழவுள்ள குடிமனைகளை நோக்கி விட்டு விட்டு ஷெல் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. [உ-15-162]

## காரைநகர் முகாமிலிருந்து அடிக்கடி ஷெல் தாக்குதல்

காரைநகர் படை முகாமில் இருந்து நேற்று அதிகாலையும் நேற்றும் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களும், துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

கடற் பிராந்தியத்திலிருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களும் நடத்தினர்.

நேற்று அதிகாலை 1 மணிக்கும், காலை 5 மணிக்கும் பின்னர் நண்பகல் 11. 30 மணியளவிலும் இத்தாக்குதல்கள் விட்டு விட்டு நடத்தப்பட்டன.

அதிகாலை வேளை காரைநகர்ப் பகுதியிலிருந்து தேடுதல் வெளிச்சமும் பாய்ச்சப்பட்டது. [உ-15-99]

### அரசு அறிவித்துள்ள

## நிவாரண வெட்டை எதிர்த்து வெகுஜனப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 6

இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தைக் குறைக்கும் அரசாங்கத்தின் முடிவைக் கண்டித்து வெகுஜன போராட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

இதேவேளை—

தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் திரு. கு. சிறில் நிவாரண வெட்டுச் சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

''இடம்பெயர்ந்த மக்களின் நிவாரணத்தை அரசு திட்டமிட்டுக் குறைப்பது மக்களை நிரந்தரமாகப் பட்டினி போடும் செயலாகும். தனது முடிவை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும். தவறின் தமிழீழம் எங்கும் நடைபெறாவிய முறையில் வெகுஜனப் போராட்டத்தை நடத்துவதற்கு நாம் ஆயத்தமாயுள்ளோம்.'' — என்றுள்ளது. [உ]

## நிவாரணத்துக்கு வந்த பழுதடைந்த பால்மா!

### 13,000 பக்கெட் நாசம்!!

அரியாலை, செப். 6

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கெனக் கொழும்பில் இருந்து அனுப்பப்பட்ட ''லஹவண்ட்'' ரக பால்மா பக்கெட்டுகள் மிகப் பழுதடைந்த நிலையில் உள்ளன.

மொத்தம் 13 ஆயிரம் பக்கெட்டுகள் பழுதடைந்த நிலையில் பாவனைக்கு உதவாது என கழிக்கப்பட்டுள்ளன. பழுதடைந்த பால்மா பக்கெட்டுகள் இப்போது களஞ்சியங்களில் இருப்பதாகவும், அவை மிக விரைவில் அழிக்கப்படும் எனவும் அறியப்படுகிறது. இந்தப் பால்மா பக்கெட்டுகள் கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வரப்பட்டவையாகும்.

கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட பால்மா வகைகள் இதற்கு முன்னரும் பழுதடைந்ததால் பல தடவைகள் எரித்து அழிக்கப்பட்டன. ஆகக் கடைசியாக காரைநகர் ப. நோ. கூ. சங்கக் களஞ்சியத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான பால்மா பக்கெட்டுகள் அழிக்கப்பட்டது தெரிந்ததே.

கையிருப்பில் உள்ள ''அங்கர்'' பால்மாவை இடம் பெயர்ந்தவர்களுக்குப் பங்கிட்டு விநியோகிக்க புனர்வாழ்வுப் பகுதியினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்றும் அறியவந்துள்ளது. [அ-17]

**இயற்கை எம் உடைமை - அதைக் காப்பது நம் கடமை**

## மண்டைதீவிலும் கட்டடங்கள் தகர்ப்பு?

யாழ்ப்பாணம், செப். 6

நேற்று நண்பகல் — 15 நிமிட இடைவெளியில் — இரு தடவைகள் — மண்டைதீவுப் பகுதியில் பலத்த குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டன. அதை அடுத்து அங்கு புகைமண்டலம் மேலெழுந்ததை குருநகர்ப் பகுதியிலிருந்து பார்க்க முடிந்தது.

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள படையினர் அங்குள்ள கட்டடங்களைக் குண்டு வைத்துத் தகர்த்ததால் எழுந்த சத்தங்களே இவை எனக் கருதப்பட்டது.

இதற்கிடையில் —

நேற்று மாலை 3. 45 மணியளவில் மண்டைதீவுப் பகுதியிலிருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. (உ-15-51)

## படையினர் சூடு

யாழ்ப்பாணம், செப். 6

வளலாயில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று முன்தினம் இரவு கண்டபடி 50 கலிபர் வேட்டுக்களைத் தீர்த்தனர்.

தொண்டமனாறு காற்றாடிப் பகுதியை ஒட்டிய கரைப் பகுதியிலும் சன்னங்கள் விழுந்தன. [ஓ]

## ரத்மலானை கொள்ளையில் கப்டன் ஒருவரும் தொடர்பு!

கொழும்பு, செப். 6

இரத்மலானை ரயில் நிலையப் பகுதியில் பாதுகாப்பு அதிகாரிகள் இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டு ரயில்வே ஊழியர்களின் சம்பளப் பணமான 48 லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவத்தில் ஆயுதப்படைப் பிரிவு ஒன்றில் கப்டனாகப் பணிபுரிந்தவர் ஒருவரும் நேரடியாகச் சம்பந்தப்பட்டுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

மீரிகம ஹலுகத்கந்த என்ற இடத்தைச் சேர்ந்த இந்நபரும் மற்றும் நால்வரும் தற்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக பொலீஸ் குற்றப் புலனாய்வுத் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி கொள்ளைச் சம்பவம் கடந்த மாத முற்பகுதியில் நடைபெற்றது தெரிந்ததே. [உ-10]

## ''குமண'' கப்பலை உடனே அனுப்புமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 6

''குமண'' கப்பல் யாழ்ப்பாணம் வருவதில் உள்ள தாமதத்தைத் தவிர்க்க மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு அலுவலகப் பிரதிநிதிகள் இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றனர்.

கொழும்புத் துறைமுகத்தில் நடக்கும் வேலை நிறுத்தம் காரணமாக 'குமண' கப்பலில் ஏற்ற வேண்டிய சுமார் 300 மெற்றிக் தொன் பொருள்களை ஏற்ற முடியாதுள்ளது; அதே சமயம் துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலை வெளியே கொண்டுவரவும் முடியவில்லை.

இக்கப்பலில் உடனடியாகப் பொருள்களை ஏற்றி கப்பலை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான முன் முயற்சிகளை எடுப்பது குறித்து, செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் கொழும்பில் அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தியத்தலாவை மலைப் பகுதியில் கடும் உஷ்ணத்துடன் எழும் புகை!

### எரிமலை வெடிக்கும் அறிகுறியா?

கொழும்பு, செப். 6

தியத்தலாவை இராணுவ பயிற்சி முகாமுக்கு அருகில் — கோணகந்த என்ற மலைச் சரிவில் தொடர்ந்து புகை கிளம்பிக் கொண்டிருக்கிறது.

இதில் இருந்து எரிமலைக் குழம்பு வெடித்துப் பீறிடும் அறிகுறிகள் தென்படுவதாகக் கூறப்படுகிறது.

இந்த மலைப்பகுதி நேற்று ரூபவாஹினிச் செய்தியில் காண்பிக்கப்பட்டது. எரிமலை வெடிக்கும் ஆபத்து உள்ளதாக நம்பப்படும் துவாரம் ஒன்றும் காட்டப்பட்டது.

மலைப் பகுதியில் இருந்து புகை கிளம்புவதையும், ஒருவர் அதில் சிறு தடியை வைத்துத் தணலாக்கி, சிகரெட்டைக் கொளுத்தி புகைப்பதையும் ரூபவாஹினி ஒளிபரப்பியது.

இந்த மலைப் பகுதியில் அனல் பறக்கும் உஷ்ண நிலை நிலவுவதாகவும், உஷ்ணம் மேலும் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மலையில் புகை கிளம்புவதுடன், சாம்பல் மேடுகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர் என்று நேற்றைய ரூபவாஹினிச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

எரிமலை ஏற்படக்கூடியது எனக் கருதப்படும் துவாரம் ஒன்றரை அடிக்கு தாழ்ந்துள்ளது என்றும், 600 சதுர மீற்றர் விஸ்தீரணமான அந்தப் பகுதியே சற்று நிலத்

(2ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாகி திலீபன் நினைவு

# தடகள விளையாட்டு இன்று இறுதி நாள்

யாழ்ப்பாணம், செப் 6

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் தியாகி திலீபனின் நினைவு 2ஆவது வருட தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் இன்றாகும்.

இன்று மாலை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மேலைத்தேய வாத்திய விருந்தும், பரிசளிப்பு நிகழ்ச்சியும் இடம்பெறும்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சி இளம்பரிதி தலைமையில் நடைபெறும் இறுதிநாள் நிகழ்ச்சியின் போது, பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்டத் தளபதி திரு. வ. செல்வராசாவும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ துரைராஜாவும் பங்குபற்றுவர்.

நேற்றுவரை நடைபெற்ற நிகழ்ச்சிகளின்படி, வட்டப் பிரதேச ரீதியாக வெல்லப்பட்ட பதக்கங்களின் எண்ணிக்கை வருமாறு :-

| வட்டப்பிரதேசம் | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 08 | 07 | 04 |
| யாழ்ப்பாணம் | 04 | 01 | 02 |
| தெல்லிப்பழை | 03 | 04 | 04 |
| நல்லூர் | 03 | 05 | 03 |
| பருத்தித்துறை | 02 | 03 | 03 |
| தீவகம் | 02 | — | 02 |
| உடுவில் | 01 | 02 | — |
| கரவெட்டி | — | 01 | 01 |

சங்கானை, கோப்பாய், பளை ஆகிய வட்டப்பிரதேசங்கள் தலா ஒரு வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளன. (உ)

## விபுலானந்தர் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 6

யாழ்ப்பாணம் கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கம் நடத்தும் சுவாமி விபுலானந்தர் நூற்றாண்டு விழா இன்று பிற்பகல் 3.30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும். (உ)

## மானிப்பாய் கோத்தணி பாடசாலைகள்

யாழ்ப்பாணம், செப் 6

மானிப்பாய் இந்துக் கல்லூரியும் அதன் கீழ் உள்ள கொத்தணிப் பாடசாலைகளும் வழமை போல் இயங்குகின்றன.

மாணவர்கள் நாளை தத்தமது பாடசாலைகளுக்குச் சமுகமளிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை அளவெட்டி அருணோதயாக் கல்லூரி, நாளை முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் பிற்பகலில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## விவசாயப் பயிற்சி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப் 6

திருநெல்வேலி அரசினர் விவசாயப் பயிற்சிப் பண்ணையின் இரண்டு வார பொது விவசாயப் பயிற்சி நாளை ஏழாம் திகதி ஆரம்பமாக உள்ளது.

உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. கே. குணரத்தினம் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்:

இப்பயிற்சிக்கு ஆண், பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும் வயதுக் கட்டுப்பாடு இடையாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று வரை விண்ணப்பங்கள் நேரில் ஏற்றுக்கொள்ளப்பட்டன. (வி)

## மாநகரசபை எல்லைக்குள் மரம் நடுகை

கடந்த வருடம் போன்று இவ்வருடமும் யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் நிழல் மரங்களை நடுவதற்கு மாநகராட்சி மன்றம் திட்டமிட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் மலைவேம்பு, இலுப்பை, கொன்றை, வாகை, சவுக்கு, வேம்பு போன்ற மரங்கள் நடப்படும். இவற்றை மரங்களாகவோ, அல்லது விதைகளாகவோ இலவசமாகக் கொடுத்துதவ விரும்புவோர், மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-30)

## இயத்தலாவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தன் இறங்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதிக உஷ்ணம் காரணமாக மலைச்சரிவில் வெடிப்புகள் காணப்படுகின்றன; மரங்கள் வாடிப்போய் காட்சியளிக்கின்றன; நிலத்தில் இருந்து துர்நாற்றம் எழுகிறது என்றும் அந்தச் செய்தியில் மேலும் கூறப்பட்டது.

நிலத்துக்கு மேல் 60°C முதல் 75°C வரையான உஷ்ணம் நிலவுவதாகவும் நிலத்துக்குக் கீழ் 245°C வெப்பநிலை நிலவுவதாகவும் கூறப்பட்டது.

இந்தப் பகுதிக்கு மக்கள் செல்வது தடை செய்யப்பட்டுள்ளதாகப் பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இதேசமயம் —

பூகர்ப்பவியல் நிபுணர்கள் இது எரிமலையா அல்லது வேறு ஏதும் ஒரு காரணத்தினால் புகை கிளம்புகிறதா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றனர். (ஓ-த)

## பல்கலைக்கழக அனுமதிக்கு யாழ். இந்துவிலிருந்து 67 பேர்

யாழ்ப்பாணம், செப் 6

1990 ஆகஸ்ட் (விசேட 1991) உயர்தரப் பரீட்சை வெட்டுப் புள்ளியின் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து 67 பேர் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படத் தகுதி பெற்றுள்ளனர்.

யாழ். இந்துவிலிருந்து ஒவ்வொரு துறைக்கும் தெரிவு செய்யப்படத் தகுதி பெற்ற மாணவர் எண்ணிக்கை வருமாறு:-

பொறியியல் — 20, மருத்துவம் — 11 பௌதீக விஞ்ஞானம் — 26, மிருக வைத்தியம் — 3, உயிரியல் விஞ்ஞானம் — 2, விவசாயம் — 3, முகாமைத்துவம் — 2 (இ)

## மாதகல், இளவாலைப் பாடசாலைகள் மானிப்பாய், நவாலியில் இயங்கும்

இராணுவ நடவடிக்கை காரணமாக இயங்காதிருக்கும் மாதகல், இளவாலை, சில்லாலை பாடசாலைகள் மானிப்பாய், நவாலி கொத்தணிப் பாடசாலைகளில் இயங்க ஏற்பாடாகியுள்ளது.

பாதிக்கப்பட்ட பாடசாலைகள் நண்பகல் 1.15 மணி முதல் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

★ மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயத்தில்— இளவாலை றோ. க. த. க. பாடசாலையும், பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலையும்—

★ நவாலி மகாவித்தியாலயத்தில் — மாதகல் நுனசை வித்தியாசாலையும், மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலயமும்—

★ நவாலி சென். பீற்றர் பாடசாலையில் — சில்லாலை றோ. க, த க. பாடசாலையும்—

★ ஆனைக்கோட்டை பால சுப்பிரமணிய வித்தியாலயத்தில் — இளவாலை கன்னியர் மடம் ம. வித்தியாலயம்.

★ உயரப்புலம் குணபால வித்தியாசாலையில் — மாரீசன்கூடல் றோ. க த க. பாடசாலையும், மாரீசன் கூடல் சுப்பிரமணிய வித்தியாசாலையும் —

★ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலையில்—சாந்தை சிற்றம்பல வித்தியாசாலை. (அ-90)

## ஆந்திராவில் கண்ணிவெடி! 11 பொலீஸார் சிதறிப் பலி!!

லண்டன், செப். 6

தென்னிந்திய மாநிலமான ஆந்திரப் பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் 11 பொலீஸார் உடல் சிதறிப் பலியானார்கள். அவர்கள் பயணம் செய்த ஜீப் வண்டி வெடியில் சிக்கி சுக்குநூறாகியது.

மக்கள் விடுதலைப் படை எனப்படும் மார்க்ஸிய ஆதரவு கெரில்லாக்கள் இத்தாக்குதலை நடத்தியதாகச் செய்தி நிறுவனங்கள் தெரிவித்தன.

ஆந்திர மாநிலத்தில் ஒரு வாரத்துக்கு முன் இடம்பெற்ற மற்றொரு கண்ணிவெடிச் சம்பவத்தில் 7 பரா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## பௌதீகவியல் வினாத்தாள் முன்கூட்டி வெளியானதா?

### இரகசியப் பொலீஸ் விசாரிக்கும்

சமீபத்தில் நடந்து முடிந்த ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையில் பௌதீகவியல் பாடத்துக்கான வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாகக் கூறப்படும் புகார் பற்றி விசாரணை நடத்தும்படி பரீட்சை ஆணையாளர் ஆர்தர்வெதமுல்ல இரகசியப் பொலீஸாரைக் கேட்டுள்ளார். (இ-எ)

## குளங்கள் புனரமைப்பு!

உடுவில், செப் 6

காலபோக மழையை எதிர்பார்த்து வடபகுதியில் உள்ள குளங்கள், வாய்க்கால்கள் பல புனரமைக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினர், பொது மக்கள் மற்றும் பொதுஸ்தாபனங்களின் உதவியுடன் வலிகாமம் வடக்கில் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்திட்டத்தின் கீழ் உடுவில் பிரதேசத்தில் உள்ள பெரிய குளத்தில் இருந்து வயல்களுக்கு செல்லும் வாய்க்கால்கள் பல துப்பரவு செய்யப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன. (த-152)

## தேவையற்ற யுத்தம் என்கிறார் ஒஸி

கொழும்பு, செப். 6

வடக்கு - கிழக்குப் பிரச்சினை காரணமாக நாளொன்றிற்கு 4 கோடி ரூபா வீணே செலவாகின்றது. தேவையற்ற இந்த யுத்தம் நிறுத்தப்படுமானால் அந்தப் பணத்தை அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும்.

கெக்கிராவையில் இடம்பெற்ற ஆடை தயாரிப்பு தொழிற்சாலையைத் திறந்து வைக்கும் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசும் போது மேல் மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஒஸி அபயகுணசேகரா இவ்வாறு சொன்னார். (த)

## கொள்ளை தொடர்பாக கான்ஸ்டபிள் கைது!

கொழும்பு, செப். 6

பல கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இரண்டு நபர்களைக் குருநாகல் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

இந்த இருவரில் ஒருவர் திருகோணமலை உப்புவெளி பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றிய ரிசேர்வ் கான்ஸ்டபிள் எனத் தெரிவிக்கப்பட்டது

கைது செய்யப்பட்ட மற்றவர் காடையர் குழு ஒன்றின் தலைவர் எனக் கூறப்பட்டது. (உ-10)

## ஆங்கில தின போட்டிகள்

உடுவில், செப். 6

மருதனார்மடம் கோட்டத்துக்கான பாடசாலைகளின் ஆங்கில தின போட்டிகள் எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் நடைபெற உள்ளன.

18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை எழுத்து சம்பந்தப்பட்ட போட்டிகளும், மறுநாள் சனிக்கிழமை வாய்மூலமான போட்டிகளும் நடைபெற உள்ளன. (த-152-90)


## காணவில்லை

### கந்தையா சண்முகநாதன்

வட்டுக் கிழக்கு சித்தன்கேணியைச் சேர்ந்த (உரை ஆசிரியர்) கந்தையா சண்முகநாதன் (02-09-92) புதன் கிழமை அன்று முதல் காணவில்லை இவரைக் கண்டவர்கள் வட்டுக் கிழக்கு, சித்தன்கேணி என்ற விலாசத்துக்கு அறியத்தரவும்:

தகவல்:

(22444) சண்முகநாதன், சிதம்பரநாதன்

## மானிப்பாய் கொத்தணி மாணவர்களுக்கு

மானிப்பாய் இந்துக் கல்லூரியும் அதன் கீழ் உள்ள கொத்தணிப் பாடசாலைகளும் வழமை போல் இயங்குகின்றன. சகல மாணவர்களும் திங்கட்கிழமை (07-09-92) தத்தம் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி, (சி/3240) — செ கேசவராஜன், கொத்தணி அதிபர்

## இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவாகம் - வலிகாமம் மேற்குப்பகுதி பிறப்பு, இறப்பு - பண்டத்தரிப்பு பிரிவின் பதிவுகாரராகிய

### திருமதி பரிமளம் சோமசுந்தரம்

அண்மையில் நடந்த அசம்பாவிதம் காரணமாக பாதுகாப்பு கருதி தற்காலிகமாக இடம்பெயர்ந்து பின்வரும் விலாசத்திற்கு தனது கந்தோரை மாற்றி அமைத்திருக்கிறார்.

திருமதி ப. சோமசுந்தரம்,
மே/பா, திரு. ஆர். சாம்பசிவம்,
முதலாம் கட்டை,
"தமயஸ்தான்",
உடுவில், சுன்னாகம். (சி-3239)

யாழ். மாவட்ட
### தச்சுத் தொழிலாளர் சங்கம்
## அறிவித்தல்

மேற்படி சங்கம் இல. 161, ஆஸ்பத்திரி வீதி முகவரியிலிருந்து இடம் மாற்றம் செய்யப்பட்டு இல 16, பசார்லேன் (ஜும்மாப்பள்ளி ஒழுங்கை) யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்குகிறது. எனவே அங்கத்துவ விண்ணப்பப்படிவம் பெற்றுக் கொண்டவர்களையும், தெரிவு செய்யப்பட்ட இணைப்பாளர்களையும், ஏனைய தச்சுத் தொழிலாளர்களையும் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செ. ஞானச்சந்திரன்,
தலைவர்.
(இடைக்கால நிர்வாகக்குழு)

16, பசார் லேன்,
யாழ்ப்பாணம்
05-09-1992.
(22441)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மாதகல், பண்டத்தரிப்பிலிருந்து
# பலர் கிளிநொச்சிக்கு இடம்பெயர்வு

முறிகண்டி, செப். 6

சமீபத்திய இராணுவ நடவடிக்கையின்போது பண்டத்தரிப்பு, மாதகல் பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்களில் பலர் தற்போது கிளிநொச்சியில் உறவினர் வீடுகளில் தங்கி உள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் வழங்க கிளிநொச்சி செயலகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

கிளிநொச்சிக்கு இடம் பெயர்ந்தவர்களில் பலர் மாதகல் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் — அவர்கள் கிளிநொச்சி — கனகபுரத்தில் தங்கி உள்ளனர் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்துவரும் மக்கள் அப்பகுதி கிராமசேவையாளருடன் தொடர்பு கொண்டு தமது குடும்ப விபரங்களைப் பதிந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. [இ-97]

## பிரேமா பாக். விஜயம்

கொழும்பு, செப். 6

ஜனாதிபதி பிரேமதாஸ இம் மாதம் 23 ஆம் திகதி பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் இதனைத் தெரிவித்தார். (த)

## சட்டப்பேரவை அவமதிப்பு: பத்திரிகை ஆசிரியர் ஆஜர்?

சென்னை, செப். 6

முரசொலி பத்திரிகையின் ஆசிரியர் செல்வம் இம்மாதம் 26ஆம் திகதிக்கு முன்னர் தமிழக சட்டப் பேரவையின் முன் ஆஜராக வேண்டும் என்று அறிவிக்கப்படுகிறது.

பேரவைக் குறிப்பில் இருந்து நீக்கப்பட்ட நிகழ்சிப் பகுதியை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் முரசொலி ஆசிரியர் சென்ற மே மாதம் 11 ஆம் திகதி சட்டப் பேரவை முன் ஆஜர் செய்யப்பட்டார்.

சட்டப்பேரவையின் அடுத்த கூட்டத் தொடரில் தான் பேரவையின் முன் ஆஜராவதாக எழுத்து மூலம் உறுதியளித்ததைத் தொடர்ந்து அவர் விடுதலை செய்யப்பட்டார். (த)

## ஜெயலலிதா மீது ஊழல் வழக்கு: பேரணியாகச் சென்று ஆளுநரிடம் தி.மு.க. மகஜர்

சென்னை, செப். 6

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா மீது ஊழல் வழக்குத் தொடர அனுமதி கோரும் மகஜர் ஒன்றை மாநில ஆளுநரிடம் இம் மாதம் 16 ஆம் திகதி மாலை பேரணியாகச் சென்று சமர்ப்பிக்க தி.மு.க. தீர்மானித்துள்ளது.

இத் தகவலை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி தெரிவித்தார்.

அ.தி.மு.க அரசு கடந்த ஓராண்டில் பல ஊழல்களையும், சட்டவிரோதச் செயல்களையும் துணிந்து செய்துள்ளது என்றும் திரு. கருணாநிதி தெரிவித்தார். [இ-எ]

## உங்களுக்கு வயதாகிவிட்டது சிறிது காலம் ஓய்வெடுங்கள்!

### சிறிமாவிற்கு தேரர் ஆலோசனை

கொழும்பு செப். 6

இப்பொழுது உங்களுக்கு வயதாகி விட்டது; அதனால் ஓய்வெடுங்கள். கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாம், முடிந்தவரை பேச்சைக்குறையுங்கள்.

தன்னைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவியும், சுதந்திரக் கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் மல்வத்தை மகாநாயக்க தேரர் ரம்புக்வெல்ல ஸ்ரீவிபசி தேரர் முன்கண்டவாறு சொன்னார்.

நாட்டிலுள்ள எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க யாராலும் முடியாது. இதனால் நாம் ஒன்றிணைந்து நாட்டின் உயர்வுக்குப் பிரார்த்திப்போம் — என்றும் அவர் சொன்னார். (த)

## ப. நோ. கூ. ச. சம்மேளனம் நடவடிக்கை

கொழும்பு, செப் 6

வடக்கு - கிழக்குக்கு முன்னர் ப. நோ. கூ. ச. மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வந்தது போல மீண்டும் வழங்க இலங்கை ப.நோ.கூ. சங்கங்களின் சம்மேளனம் நடவடிக்கைகள் எடுத்து வருவதாக, இச் சங்கத்தின் தலைவராக அண்மையில் தெரிவான மகிபால ஹேரத் தெரிவித்தார். (த)

## மத்திய கல்லூரி அரிமா கழகம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், செப். 6

பண்டத்தரிப்பு கோட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான 160 அப்பியாசப் புத்தகங்களை யாழ். மத்திய கல்லூரி 'அரிமா' கழகத்தினர் கோட்டக்கல்வி பிரதிப் பணிப்பாளர் திரு. வி. மகேசவேலுவிடம் ஒப்படைத்தனர். (இ)

## கட்டபொம்மன் நாட்டுக்கூத்து

பாஷையூர் முத்தமிழ்க் கழகத்தின் அனுசரணையுடன் பிரகாஷ் நாடக மன்றம் தயாரித்து வழங்கும் "வீர பாண்டிய கட்டப் பொம்மன்" (பாரம்பரிய முறையிலான வரலாற்று நாட்டுக்கூத்து) இன்று ஞாயிறு இரவு 7-15 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் மேடையேறும்.

பழைய தலைமுறை கலைஞர்களுடன் இளையதலைமுறைக் கலைஞர்களும் இணைந்து இந்நாடகத்தை தயாரித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. [இ-51]

## அழைப்பாணை

கொழும்பு, செப். 6

நீதிமன்ற அழைப்பாணையை ஒப்படைக்கும் அதிகாரம் இனி கிராமசேவையாளர்களிடமும் ஒப்படைக்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

உயர்கல்வி மற்றும் நீதித்துறை அமைச்சர் சாகுல் ஹமீத் இது தொடர்பாக தெரிவித்த யோசனையை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது. (இ-எ)

## தானியங்கள் கொள்வனவு

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகளிடம் இருந்து சிறுதானியங்களை கொள்வனவு செய்யவும் —

அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் தானியங்களை பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கவும் —

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

குரக்கன், பயறு, கௌபீ போன்ற சிறுதானிய வகைகளே கொள்வனவு செய்யப்பட உள்ளன.

விவசாயிகளிடம் இருந்து ஒரு கிலோ குரக்கன் ரூபா 26க்கும், பயறு ரூபா 25க்கும், கௌபீ ரூபா 20க்கும் கொள்வனவு செய்யப்பட உள்ளன. [த-152]

## அகதிகள் புனர் வாழ்வுக்கு ரூ. 160 கோடி உபமான்யம்

### நாடாளுமன்றில் கோரப்படும்

கொழும்பு, செப். 6

அகதிகள் புனர்வாழ்வுக்கென 160 கோடி ரூபாவைக் கோரும் உபமான்யப் பிரேரணை ஒன்று இம்மாதம் மூன்றாம் வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

புனர்வாழ்வுப் பணிகளுக்கு அவசரமாக நிதி தேவைப்படுவதால் இந்த உபமான்யப் பிரேரணை கொண்டு வரப்படுவதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்ரமசிங்கா கடந்த வியாழக்கிழமை தெரிவித்தார்.

இதற்கு முன்னர் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சமூக நலத்துறை அமைச்சுச் செயலாளர் சிறிஸ்ரீ சில்வா, அகதிகள் புனர்வாழ்வுக்கு தமது அமைச்சு இந்த ஆண்டு 260 கோடி ரூபாவைக் கோரியது என்றும் —

ஆனால் திறைசேரி 100 கோடி ரூபாவை மட்டுமே ஒதுக்கியது என்றும் தகவல் வெளியிட்டிருந்தது தெரிந்ததே.

ஒதுக்கப்பட்ட 100 கோடி ரூபா பணம் முடிவடைந்ததைத் தொடர்ந்தே அகதிகளுக்கு மாதாமாதம் வழங்கப்பட்டு வரும் உலர் உணவு நிவாரணம் அரைப்பங்காகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

கூடுதல் நிதி கிடைக்கும் வரை அகதிகளுக்கு உதவும்படி அரச சார்பற்ற நிறுவனங்களை அமைச்சு கேட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் முன்பு 10 லட்சம் அகதிகள் இருந்தனர். இப்போது அந்த எண்ணிக்கை 5 லட்சமாகக் குறைந்துள்ளது. 2லட்சத்து 21 ஆயிரத்து 152 அகதிகள் யாழ்ப்பாணத்தில் உள்ளனர். — என்ற புள்ளி விவரத்தையும் திரு. சிறிஸ்ரீ சில்வா அப்போது வெளியிட்டார். [அ-எ]

## பாராட்டு விழா

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நீண்டகாலம் பணிபுரிந்த இருவருக்கு ஆலய பரிபாலன சபையினரும், சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினரும் இணைந்து இன்று பாராட்டு விழா நடத்துகின்றனர்.

இவ்விழாவில் இந்த ஆலயத்தின் சமய, சமூக பணிகளை தொடர்ந்து ஆற்றி வரும் ச. நமசிவாயம் அவர்களுக்கு 'சிவநெறிச் செம்மல்' பட்டம் வழங்கப்படும். அத்துடன் ஆலயத்தில் நான்காவது சந்ததியாக பூஜை செய்த சிவஸ்ரீ சு. நடராஜக் குருக்கள் அவர்களுக்கு பொன்னாடை போர்த்தப்படும்.

## தொண்டர் ஆசிரியர் விவகாரம்: கல்விச் சேவை சபையின் கூட்டத்தில் இறுதி முடிவு?

யாழ்ப்பாணம், செப். 6

யாழ். மாவட்டத்தில் தற்சமயம் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களுக்கு விரைவில் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நியமனங்கள் தொடர்பாக கொழும்பில் கல்விச் சேவைச்சபையில் நடைபெறும் கூட்டத்தில் கலந்துகொள்ள வருமாறு யாழ். பிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. அகதிகள் தூதரக வானொலி மூலமாக கல்விச் சேவைச் சபை இந்த அறிவிப்பை நேற்று முன்தினம் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ளது. [உ-3]


உ
சிவமயம்

### திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஆங்கீரச வருஷம் ஆவணித்திங்கள் 28ஆம் நாள் (13-09-1992) ஞாயிற்றுக்கிழமை காலை 8-17 மணிமுதல் 10-21 மணி வரை வரும் துலாலக்கின ★ சுபமுகூர்த்த வேளையில் ★

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>★ சிவயோகன் ★<br>(சிவா றேடிங் கோ, சாவகச்சேரி)<br>அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>★ இராஜவனிதை ★<br>அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் இனிதே நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து, ஆசீர்வதிக்கும் வண்ணம் ★ அன்புடன் அழைக்கின்றோம். ★

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

திரு. திருமதி வே. சின்னத்தம்பி
குடும்பத்தினர்,
டச்சு வீதி,
சாவகச்சேரி.

திரு. திருமதி இ. நடராசா
குடும்பத்தினர்,
விநாயகர் ஸ்ரோர்ஸ்,
கண்டி வீதி, சாவகச்சேரி.

[22397]



### கம்பியூட்டர் கல்வி




★ BASIC
★ PASCAL
★ d BASE III +
★ LOTUS 1-2-3
★ WORD STAR 5.5

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
07 — 09 — 1992 WEEK DAY
06 — 09 — 1992 WEEK END

மேலதிக விவரங்களுக்கு:
யுனிக்கோ கம்பியூட்டர் சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)

வடமராட்சி:
'சதா பொன்ஸ்',
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

தென்மராட்சி:
சயன்ஸ் சென்ரர்,
மடத்தடி,
சாவகச்சேரி.

[சி 3178]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. பூச்சி நீக்கப்பட்டு, 50 நாட்கள் வயதுடையவை. தொடர்பு கொள்ளவும்: இல: 15, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். [22431]

15 மாத அல்ஷேசன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. மா. வைலிங்கம், கோணா மலை லேன், கொக்குவில் கிழக்கு. [22438]

Honda 1.5 K.V. ஜெனறேற்றர், மண்எண்ணெய் Fridge, அலுமினிய ஷோகேஸ், வேறும் பல பொருள்கள். ஜெபா ஏல விற்பனைப் பகுதி, டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [5292]

இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 698/15, தலையாழி [வைரவர் கோவிலடி], சபாபதி வீதி, யாழ்ப்பாணம். [22425]

அசில் இன வெள்ளடிக் கோழி, சேவல், 3 மாத கலப்பினப் பேட்டு, சேவல் குஞ்சுகள், கறுப்பு Hyline முட்டையிடும் கோழிகள், Japanese, Chinese Feather Bantoms, Bamas முட்டைகள் [அடை வைப்பதற்கு உகந்தவை] ஆண் மயில் என்பன விற்பனைக்குண்டு. 70/6 ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். [5297]

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. டில்கா வாச் வேக்ஸ், இல: 284, ஸ்ரான்லி வீதி, [பழைய கிளாரை முன்பாக] யாழ்ப்பாணம். [22345]

### வாங்கப்படும்

கோழித்தீன் வெற்றுப் பக்கெற் நல்லநிலைமையில் வாங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். [சி-3230]

### மணமகள் தேவை

யாழ். இந்து, 30 வயது நிரம்பிய Ph.D. [கேம்பிறிஜ் யூனிவசிற்றி] விரிவுரையாளருக்கு B.Sc மணமகள் தேவை. 1965க்கு பின்னர் பிறந்தவர் விரும்பத்தக்கது. மணமகனின் உயரம் 6அடி, நட்சத்திரம் சுவாதி, கிரகபாவம் 16/16, ABCDE 20, கண்டி றோட், சுண்டிக்குளி. [22414]

### மணமகன் தேவை

யாழ். கத்தோலிக்க, 33 வயதுடைய, அழகிய, ஆற்றமற்ற, கொழும்பில் பிரபல தனியார் நிறுவனமொன்றில் கனிஷ்ட நிர்வாகியாகத் [Junior Executive] தொழில் புரியும் மகளுக்குப் பெற்றோர் பொருத்தமான வரனைத் தேடுகின்றனர். தகுந்த சீதனம் வழங்கப்படும். முதல் கடிதத்திலேயே முழு விவரங்களையும் தரவும். இல:436, மே/பா, உதயன். (22359]

### மாதிரிப் பரீட்சை

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதி மாதிரிப் பரீட்சை (ஆண்டு 5 மாணவர்களுக்கு) 06-09-92 ஞாயிறு மு.ப. 8.00, மு.ப. 11.00 மணி நேரங்களில் [தமிழ், கணிதம், ஆங்கிலம்] நடைபெறும். பதிவு செய்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [22416]

### பிரயோககணிதம் A/L

''நிலையியல் பகுதி 1'', ''காவியும் அதன் பிரயோகங்களும்'' ஆகிய பயிற்சி நூல்களும், பிரயோககணிதம் - மாதிரி வினாத்தாள்களும் - விடைகளும் ஆகிய நூலும் தமிழீழமெங்கும் விற்பனையாகின்றன. ஆசிரியர்:- திரு. கி. துரையப்பா, B.Sc [சிறப்பு], M.Sc. [Eng]. [5285]

### தையல்காரர் தேவை

வெட்டித் தைக்கத் தெரிந்த ஆண், பெண் தையல்காரர் உடன் தேவை. தொடர்பு: மல்லிகா ஸ்ரோர்ஸ், மத்திய சந்தைக்கு முன்பாக, மானிப்பாய். (22401)

### தவறிவிட்டது

செவிப்புலன் குறைந்தவர்கள் உபயோகிக்கும் கருவி (Hearing-aid) 03-09-1992 அன்று சுண்டிக்குளிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மத்திய கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [சி-3327]

### காணவில்லை

பிறவுண், கறுப்பு கலந்ததும் நெற்றியில் கறுப்புப் பொட்டு அமைந்ததுமான பொமனேரியன் நாய்க்குட்டி கோண்டாவில் மேற்கில் காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் மகாலிங்கம் அரைக்கும் ஆலை, புகையிரத வீதி, கோண்டாவில் முகவரிக்கு அறியத் தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [4963]

கருவெள்ளை நிறமும், மாவெள்ளை நிறமும் உள்ள, நலமடித்த, நடுத்தர வயதுடைய, பெயர்க்குறிகள் எதுவுமில்லாத மாடுகளை ஒரு வாரகாலமாகக் காணவில்லை. தகவல் தருவோருக்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. உலகநாதன், கிராமசேவையாளர், ஆவடி, உடுவில். [22430]

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவம் உடைய ஆசிரியரினால் இரண்டு மாதங்களில் தொடர் 40 மணித்தியாலங்களில் விசேட சித்திக்கு கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல: 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [22348]

## தேவை
## O/L வகுப்புகளிற்கு

சைவசமயம்
றோமன் கத்தோலிக்கம்
கிறீஸ்தவம்
மனைப் பொருளியல்
நடனம்
சங்கீதம்

ஆகிய பாடங்களை சனி ஞாயிறு நாட்களில் மட்டும் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை.

அனுபவமுள்ளவர்கள் 10-09-1992 இற்கு முன் நேரில் வரவும்.

**BOND INSTITUTES**
58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3308)

## ஆண்டு 5 - 1993
## (ஆண்டு - 4 1992)
(புலமைப் பரிசில் Aug. 93)

மேற்படி பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

## முதலாவது பயிற்சிப் பரீட்சை
## 27 - 09 - 1992

Bond — யாழ்ப்பாணம்
Selin — இருபாலை
Pearl — நீர்வேலி
Kugan — ஆவரங்கால்
Maths Centre — நெல்லியடி
Satha Pons — அல்வாய்
Y.M.C.A. — பருத்தித்துறை
Brilliant — சாவகச்சேரி
Vinyls — சுன்னாகம்
National — பண்டத்தரிப்பு
Paarathy — சித்தன்கேணி
Lukky — கட்டுடை
Bitsmans — மானிப்பாய்
Vinayahar — ஆனைக்கோட்டை
Keen — திருநெல்வேலி
Osslo — கச்சேரியடி

விவரங்களுக்கு:
Examination Unit,
**BOND INSTITUTES,**
யாழ்ப்பாணம்.
[சி-3314]

## C. C. A.
யாழ்ப்பாணம்.

**Spoken English With Grammar By Jeyaganth**

ஆரம்பம்: 10 — 09 — 1992 4-30 p.m
[சி-3329]

## புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்,

## O/L PAPER CLASS
பிரிவு - II

ஆரம்பம்:
**08-09-1992**

கணிதம் — கதிர்
— ரட்ணவேல்
விஞ்ஞானம் — தயாநிதி
சமூகக்கல்வி — கியூபேட்
ஆங்கிலம் — ரவி
— பகீரதன்
தமிழ் — பிரதீபன்

★ அனுமதிகளை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(சி-3101)

### முஸ்லிம் காங்கிரஸ் பேச்சு

கொழும்பு, செப். 6

இனப்பிரச்சினை தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன் வைக்கும் தீர்வுபற்றி அதுசகல பௌத்த பீடாதிபதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் என்று அறிவிக்கப்படுகிறது. (ந)

## ★ Typing
## ★ Short-Hand

பிரிவு: I வார நாட்களில்.
பிரிவு: II சனி, ஞாயிறு.

புதிய வகுப்புகள் ஆரம்பம்:
**09-09-92**

[பயிற்சி முடிந்ததும் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்.]

**Bond Institutes**
58A, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
[சி-3318]

மாணவர்களைப் பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காக ஆண்டு - 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

## பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை

மாதத்தின் 2ஆம், 4ஆம் ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 1-00 மணிக்கு நடத்தப்படும்.

ஆரம்பம்:
**13-09-1992**

[பரீட்சைக்குத் தோற்ற வசதி இல்லாதவர்கள் வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும்.]

பரீட்சைப் பகுதி:
**Bond Institutes**
58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[சி-3326]

## பாசையூர் முத்தமிழ் கழகத்தின்
அனுசரணையுடன்

வரலாற்றுத் தொன்மை வழுவற்ற தன்மையுடன்

**பாசையூர் பிரகாஷ் நாடகமன்றம்**
தயாரித்து அரங்கேற்றும்

## "வீரபாண்டிய கட்டப்பொம்மன்"
(நாட்டுக் கூத்து)

கவியாக்கம்: பாசையூர்ப் புலவர், மதுரகவி அமரர் மிக்கோர்சிங்கம்
இடம்: பாசையூர் புனித அந்தோனியார் ஆலய முன்றல்
காலம்: 06 — 09 — 1992
நேரம்: இரவு 7 - 15 மணிக்கு

முற்றிலும் இலவசம், முத்தமிழ்ப் பழரசம் முழுமையாய் பருக முன்னமே வருக!
[22424]

"இடம் பெயர்ந்தோர் இடர் போக்க உதவிடுவீர் உள்ளம் கனிய"

இடம் பெயர்ந்த மக்களின் கல்வி, சுகாதார சேவைக்காக யாழ். அரிமா கழகத்தினரால் (யாழ். லயன்ஸ் கழகம்) நடத்தப்படும்

## கலை விழா

★ நிகழ்ச்சிகள் ★

நாடகம்: திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின்
(அ) நாடக அரங்க கல்லூரியினர் வழங்கும்
**"எந்தையும் தாயும்"**
(ஆ) சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தமிழ் மன்றம் வழங்கும்
**"மானுடம் வெல்லும் வரை"**
இசை: செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன் வழங்கும்
**"கர்நாடக இசைக்கச்சேரி"**

காலம்: 12 — 09 — 1992
இடம்: சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபம்
நேரம்: மாலை 3-30 மணி

சேவை தொடர ஆதரவு தருவீர்!
நன்றி:
- யாழ். லயன்ஸ் கழகம்
(சி-3335)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### சர்வதேச விவகாரமாக மாறட்டும்!

ஈழத் தமிழர்களுக்கு அடிப்படை ஜீவாதார உரிமைகள் மறுக்கப்படுவது குறித்தும் — அவர்கள் உயிர் வாழும் உரிமை இன்றிப் பரிதவிப்பது குறித்தும் — ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்த வேண்டும்.

நியூயோர்க்கில் உள்ள "கோர்க்கியா" என்ற அமைப்பு இவ்வாறு ஒரு மனுவை ஐ. நா. சபையில் தாக்கல் செய்திருக்கிறது.

ஈழத்தமிழரை விசாரணை இன்றிக் கைது செய்வது, முகாம்களிலும் சிறைகளிலும் அடைத்துச் சித்திரவதை செய்வது, நீதிக்குப் புறம்பாகக் கொலை செய்வது, தமிழ இனத்தைத் திட்டமிட்டுப் பூண்டோடு ஒழிப்பது ஆகியன குறித்து விசாரிப்பதற்கு இடைக்கால விசாரணை மன்றம் ஒன்றை நிறுவ வேண்டும். தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை தடுத்து நிறுத்த வகை செய்ய வேண்டும் — என்பதே "கோர்க்கியா"வின் மனுவாகும்.

இந்த முயற்சியும், கோரிக்கையும் வரவேற்கப்பட வேண்டியவை.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆக்கபூர்வமான எந்தவொரு நடவடிக்கையையும் அரசு இன்னும் மேற்கொள்ளவில்லை. இதயசுத்தியுடன் அதன் பொருட்டு உழைக்கவில்லை. காலத்தை வாங்குவதற்கும், உலகத்தை ஏமாற்றுவதற்குமாக வெறும் தகடுதத்தங்களிலும், திருகுதாளங்களிலுமே அது ஈடுபட்டு வருகிறது.

ஆகையால் தமிழர் பிரச்சினை தீர்வதற்கான எந்தச் சாத்தியமும் இல்லை. இன்னும் ஐந்து வருடங்கள் கழிந்தாலும் தமிழர்களுக்கு ஏற்புடைய - அவர்கள் சுதந்திர மனிதர்களாக வாழ வகை செய்யும் - தீர்வைச் சிங்களவர்கள் முன் வைக்கப்போவதில்லை என்பது நிதர்சனம்.

ஆகவே தமிழர் பிரச்சினை இனியும் உள்நாட்டு விவகாரமாக முடங்குண்டு கிடக்கக் கூடாது. இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரமே என்று மூடிமறைக்க ஸ்ரீலங்கா அரசுக்கும், சிங்களக் கருத்து நிலைப்பாட்டுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

ஓர் இனத்தின் மனித உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் பறிக்கப்படும் போது அதனை உள்நாட்டுப் பிரச்சினையாகக் கருதமுடியாது. அதுவும் இலங்கையில் போரையே இயல்பு நிலையாக்கி, தமிழர்களைத் திட்டமிட்டு இன ஒழிப்புச் செய்யும் போது அது எப்படி உள்நாட்டு விவகாரமாக முடியும்?

மிக அண்மையில் உருவெடுத்த சேர்பியர் - குறோசியர் விவகாரத்தில் ஐ. நா. அக்கறைகாட்ட முடியுமானால், அங்கு தீர்வையும் சமாதானத்தையும் கொண்டுவரத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முடியுமானால் —

திட்டமிட்ட இனப்படுகொலை மூலம் வாழ்வுரிமைகளும், அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் மிக நீண்ட காலமாக மறுக்கப்படும் ஈழத்தமிழர் விவகாரத்தில் ஏன் அக்கறைகொள்ள முடியாது?

ஈழத் தமிழர் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என்ற கோட்டைக் கடந்து சர்வதேசப் பிரச்சினையாக்கப்பட வேண்டும். அந்த வகையில், "கோர்க்கியோ" அமைப்புப் போன்று மனித உரிமைகளைப் பேணுவதில் அக்கறையுள்ள சகல சர்வதேச அமைப்புகளும், அரசாங்கங்களும் ஈழத் தமிழர் மீது கரிசனை கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

# படை அதிகாரி மரணத்தை வைத்து அரசியல் லாபம் பெற சிலர் முயற்சி

## ஜனாதிபதி கூறுகிறார்

கொழும்பு, செப். 6

இராணுவத்தினருக்குப் பதவி உயர்வுகளையும், பதக்கங்களையும் வழங்க நானே முன்வந்தேன். படை அதிகாரிகளின் மரணத்தை வைத்து அரசியல் லாபம் பெறுவதற்கு சிலர் முயற்சிக்கிறார்கள்.

நேற்று முன்தினம் அநுராதபுரம் மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் உரை நிகழ்த்துகையில் ஜனாதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசியதாவது:

இராணுவ அதிகாரிகளுக்கு கௌரவம் அளிப்பதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட முறை ஒன்று உண்டு.

சிவில் அதிகாரிகள் கௌரவிக்கப்படுவது போன்று இராணுவத்தினர் கௌரவிக்கப்படுவதில்லை.

படை அதிகாரிகளின் மரணத்துக்கு துக்கதினம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தால் வட பகுதியில் திரு பிரபாகரன் எவ்வாறு நடந்து கொண்டிருப்பார்?

யுத்த காலத்தில் எங்கு துக்க தினம் பிரகடனப்படுத்தப்படுகிறது? இவை பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்படி ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி மேலும் பேசுகையில்;

வெற்றியையும், தோல்வியையும் பொருட்படுத்தாது தீர்ப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் எப்போதும் தயாராக உள்ளது. பல தடவைகள் அரசாங்கம் இவ்வாறு நடந்து கொண்டுள்ளது. எனினும் ஜனநாயகம் பற்றியும், அடிப்படை மனித உரிமைகள் பற்றியும் பெரிதாகப் பேசி வருபவர்கள் இத்தகைய நீதிமன்றத் தீர்ப்புகளை ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இருப்பது இல்லை. தமக்கு நன்மையளிக்கக் கூடிய நீதிமன்றத் தீர்ப்புகளை மட்டுமே ஏற்றுக் கொள்வதற்கு சிலர் தயாராக உள்ளனர் என்றார்.

[இ-எ]

# நாம் சுதந்திரத்தைப் பெற வாய்மை, தூய்மை அவசியம்

## வள்ளுவர் விழாவில் பேச்சு

உரும்பராய், செப். 6

நாம் சுதந்திரம் பெறவேண்டுமானால் வாழ்க்கையில் வாய்மையும், தூய்மையும் அவசியம். எம்மிடையே ஒற்றுமையும் அவசியம். ஒற்றுமை நிலவ வாய்மையைப் பேணுதல் இன்றியமையாதது.

உரும்பராய் திருவள்ளுவர் மன்றத்தினர் ஏற்பாட்டில் நடைபெறும் வள்ளுவர் விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும் போது யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைப் பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது:

தூய அன்புடன் எல்லோரும் ஒருவரை ஒருவர் நேசிக்க வேண்டும் என்பதை திருக்குறள் வலியுறுத்துகிறது. இந்த அன்பு அறம் தழுவியது. அது தூய்மையானதாகவும், ஒழுக்கம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும் — என்றார்.

ஜப்பான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி மனோன்மணி சண்முகதாஸ் தமது உரையில்:

வள்ளுவர் கூறிய அறம், பொருள் இரண்டும் உலகிற்குப் பொதுவானவை. ஆனால் இன்பம் தமிழினத்திற்கு மட்டுமே பொருந்தும். ஏனைய மேலை நாடுகளில் பண்பாடுகள் வேறுபடுவதால் அவர்களுக்குப் பொருந்தாது. இதனால் தான் திருக்குறளை மொழி பெயர்த்தவர்கள் இன்பத்துப் பாலை மொழிபெயர்க்கும் போது சிக்கலை எதிர்நோக்கினர் — என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்விகள் ஆர்த்தி, ஜெயா, திருமதி மீரா அருள்நேசன், திருமதி கிருஷ்ணவேணி நோபேட் ஆகியோரும் உரையாற்றினர்.

(த-154)

# விமான நிலையப் பகுதியில் புதிய கட்டடங்களுக்கு தடை

கொழும்பு, செப். 6

சிவில் விமானப் போக்குவரத்துப் பணிப்பாளரிடம் இருந்து முன்கூட்டியே அனுமதி பெறாமல் விமான நிலையப் பகுதிகளில் புதிய கட்டட வேலைகள் எதையும் அங்கீகரிக்காமல் தடை செய்யுமாறு ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

நாட்டில் உள்ள உள்ளூர் விமான நிலையங்களில் விமானங்கள் பாதுகாப்பாக ஏறி இறங்குவதை உறுதி செய்யுமுகமாக புதிய விதிகளை அரசாங்கம் பிரகடனம் செய்யவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(த-எ)

## பனம்பழத் தோசை!

பனம்பழத்திலிருந்தும் தோசை சுடலாம்.

நீங்கள் பனந்தோசையை ருசி பார்க்க விரும்பின் அதனைச் சுடுவதற்குப் பின்வரும் செய்முறையைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தும்பு நீக்கிய பனங்களி ஒரு சுண்டும், மாவு ஒன்றரைச் சுண்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.

பனங்களியைப் பிசைந்து துணியில் வடித்தெடுத்து எலுமிச்சம் புளிவிட்டுக் கொதிக்க விடவும். இதனால் காறல் நீங்கிவிடும். கொதிக்க வைத்த களியை இறக்கி ஆறவிட்டு மாவைக் கொட்டிக் குழைத்து பிசைந்து புளிக்கவைக்கவும்.

மறுநாள் காலை அளவான உப்பிட்டு நீர்விட்டுக் கரைக்கவும். மிளகு சீரகம் பொடியாக்கிச் சேர்த்துக்கொண்டால் சுவை அதிகரிக்கும். நீங்கள் விரும்பிய வண்ணம் தாளிதம் செய்து போடலாம். அல்லது வெங்காயம், மிளகாய் அரிந்து போடலாம்.

இவ்வாறு தயாரித்த மாவை தோசைக்கல்லில் வார்த்து தோசைபோல எடுக்கலாம். இலுப்பெண்ணெய் உபயோகித்தால் நல்லது.

## கல்விக் கண்காட்சி

தாளையடி, செப். 6

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு ஏற்பாடு செய்துள்ள கல்விக் கண்காட்சி எதிர்வரும் 13,14 ஆம் திகதிகளில் நாகர் கோவில் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

[த-144]

# தட்டெழுத்தாளர் போட்டிப் பரீட்சைக்கு பதில் அளிக்கும் வழிமுறை

விரைவில் நடைபெற இருக்கும் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் ஆட்சேர்ப்புப் போட்டிப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் நன்மைகருதி வெளியிடப்படும் இக் கட்டுரையில் கடந்த வியாழக்கிழமை சுருக்கெழுத்தாளர் பரீட்சைக்கான அறிவுரைகள் வெளியாகின.

இன்று தட்டெழுத்தாளர் பரீட்சைக்கான அறிவுரைகள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

### தட்டச்சுப் பரீட்சை

இப் பரீட்சைக்கான குறைந்த வேகம் தமிழ், ஆங்கில மொழிகளில் முறையே 20, 30 சொற்கள். இதற்கென தரப்படும் பந்தியைத் தொடர்ச்சியாக 20 நிமிடங்களுக்குப் பொறிக்க வேண்டும். மேற்பார்வையாளர் விடைவளிப்பதற்கான தாள்களை வழங்கியவுடன் அவற்றில் இரண்டைத் தட்டச்சுப் பொறியில் இட்டு (ஒன்று தட்டச்சுப் பொறிபதற்காகவும் மற்றது தட்டச்சு உருளையைப் பாதிக்காது இருப்பதற்காகவும்) வினாத்தாளில் உள்ள அறிவுரையின் படி சுட்டெண்ணைப் பொறிக்க வேண்டும் அல்லது பேனாவால் எழுத வேண்டும். பின்னர் வினாத்தாளில் உள்ள அறிவுரைகளைக் கவனமாக வாசிக்க வேண்டும்.

விடைத்தாளின் மேற்பக்கத்தில் ஒரு அங்குல இடைவெளியும், கீழ்ப்பக்கத்தில் அரை அங்குல இடைவெளியும் விடலாம். [illegible] (Margin) இடது பக்கத்தில் 10 இடைவெளிகளும், வலது பக்கத்தில் 5 இடைவெளிகளும் விடலாம். பந்தியின் ஆரம்பத்தில் இடது பக்க எல்லையில் இருந்து 5 இடைவெளிகள் விடலாம்.

அறிவுரைகளில் வரிகளுக்கிடையே எவ்வளவு இடைவெளி விடவேண்டும் எனக் கூறப்பட்டிருந்தால் அவ்வாறே செய்ய வேண்டும் அல்லது சாதாரணமாக $1\frac{1}{2}$ இடைவெளி விடலாம். பரீட்சார்த்தி தமது பொறியில் $1\frac{1}{2}$ இடைவெளி ஒழுங்குபடுத்த முடியாத விடத்து ஒரு இடைவெளி விடலாம். வேகப் பரீட்சையைச் செய்யும்போது ஒரு எழுத்தையேனும் தவறவிடக் கூடாது. சொற்களை பொறிக்காது விட்டால் அல்லது மாறிப் பொறித்தால் புள்ளிகளை வீணாக இழக்க நேரிடும்.

இது ஓர் போட்டிப்பரீட்சை என்பதால் விரைவாகவும் அதேவேளை பிழைகள் இன்றியும் ஒழுங்காகப் பொறிப்பவர்கள் கூடிய புள்ளிகளைப் பெறலாம். முற்றுப் புள்ளி, கேள்விக்குறி, ஆச்சரியக்குறி ஆகியவற்றின் பின் இரு இடைவெளிகள் விடவேண்டும். தவறுதலாக ஒரு இடைவெளி விட்டால், இதுவும் பிழைகளில் ஒன்றாகவே கணிக்கப்படும். வசனங்களைப் பிரித்துப் பொறிப்பதை கூடியவரையில் தவிர்ப்[illegible] [illegible]ணும் பிரித்துப் பொறிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளவேண்டும்;

உச்சரிப்புக்கேற்ற முறையில், ஆங்கிலத்தில் - ing போன்றவற்றிற்கு முன்பு (go-ing), ஆங்கிலத்தில் ஒரு சொல்லில் ஒரே எழுத்து அடுத்தடுத்து இருமுறை வந்தால் அவற்றின் மத்தியில் (Sap-phire), தொடர்ச் சொற்களின் மத்தியில்

பின்வரும் சந்தர்ப்பங்களில் சொற்களைப் பிரிக்கக் கூடாது:

ஒரு வசனத்தின் இறுதியில் இரு எழுத்துக்கள் இருக்கும்

**க.வே. சிவசந்திரதேவன**
(செயலாளர், வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்)

போது, ஒரு சிறிய சொல், அங்கீகரிக்கப்பட்ட சுருக்கங்கள், பெயர்ச் சொற்கள், இலக்கங்களும் பணத்தொகையும், பந்தியின் அல்லது பக்கத்தின் கடைசிச்சொல்.

தமிழ்மொழி மூலமான தட்டெழுத்துப் பொறித்தலில் எச்சந்தர்ப்பத்திலும் வரி ஆரம்பத்தில் ம், ன், ஞ் போன்ற மெய்எழுத்துக்கள் வரலாகாது.

விரைவுப் பரீட்சையைச் செய்து கொண்டிருக்கும் போது அதில் ஏதாவது பிழை ஏற்படின் அதனைத் திருத்த முயற்சிக்கக் கூடாது. திருத்தப்பட்டால் அதற்கு எந்தவித புள்ளிகளும் வழங்கப்படமாட்டாது. ஆனால் பரீட்சார்த்தியின் பிழையான செயலுக்காக புள்ளிகளைத் தண்டமாக இழக்க நேரிடும்.

வினாத்தாளில் "கொடுக்கப்பட்ட பந்தியை 20 நிமிடங்களுக்குள் நீர் பொறித்து முடித்தால் அதை மீண்டும் பொறிக்குக" எனக் கூறப்பட்டிருக்கும். மீண்டும் பொறிக்கக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படின் அதே பக்கத்திலேயே தொடர்ந்து பொறிக்க வேண்டும். அதே பக்கத்தில் இடம் இல்லாவிடின் அதே தாளின் மறுபக்கத்தில் பொறிக்க வேண்டும்.

எச்சந்தர்ப்பத்திலும் வேறு தாளில் பொறிக்கக் கூடாது. அப்போது முதல் பக்கத்தில் விட்ட எல்லைபோல அல்லாது இடது பக்கத்தில் 5 இடைவெளிகளும் வலது பக்கத்தில் 10 இடைவெளிகளும் விடவேண்டும். இதனைப் பரீட்சார்த்திகள் நன்கு கவனிக்க வேண்டும்.

இப்பரீட்சைகளுக்குத் தயரார் செய்யும் பரீட்சார்த்திகள் தினமும் சுருக்கெழுத்துப் பயிற்சியிலும், தட்டெழுத்தைச் சிறந்த பொறிகளிலும் பயிற்சி செய்ய வேண்டும். அத்துடன் பயிற்சி செய்யும் பொறியையே பரீட்சைக்கும் பாவிப்பது மிகுந்த பயனைக் கொடுக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மானிப்பாய் பகுதியில் அகதிகளுக்குக் குடிசைகள்

நவாலி, செப் 6

மாதகல், இளவாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்து மானிப்பாய் பகுதியில் தங்கியுள்ள மக்களுக்கு குடிசைகள் அமைத்துக் கொடுக்கப்பட உள்ளன;

தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகம் (ரி. ஆர். ஆர். ஓ) முதற்கட்டமாக அறுபது குடிசைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இக்குடிசைகளை அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் உள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியில் இக்குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாடசாலைகளில் தங்கியுள்ள இடம்பெயர்ந்தோரில் ஒரு பகுதியினர் இக்குடிசைகளில் அமர்த்தப்படுவர்.

இரண்டாவது கட்டமாக மேலும் குடிசைகளை அமைத்து உதவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

[அ-100]

# மரண அறிவித்தல்கள்

## சங்கரசபாபதிக்குருக்கள் தங்கலட்சுமிஅம்மா

கரணவாய் தெற்கு திருமதி சங்கரசபாபதிக்குருக்கள் தங்கலட்சுமிஅம்மா 5 - 9 - 92 சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (6-9-92) ஞாயிறு பி. ப. 2 மணிக்கு கரணவாய் தெற்கில் நடைபெறும். சகலரும் இவ்வறிவித்தலை ஏற்கவும்.

தகவல்:
ச. இராமநாதக் குருக்கள்,
ச. வைத்தியநாத சர்மா,
(அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம்,
யாழ்ப்பாணம்)
திருமதி சுப்பிரமணிய ஐயர்,
(மக்கள்)

கரணவாய் தெற்கு
நெல்லியடி.

(22446)

## காசிப்பிள்ளை கந்தசாமி

சித்திரமேழி இளவாலையைப் பிறப்பிடமாகவும் செட்டிச்சோலை, அளவெட்டி வடக்கு அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட திரு. காசிப்பிள்ளை கந்தசாமி (நில அளவையாளர், நில அளவைத்திணைக்களம், யாழ்ப்பாணம்) 05 - 09 - 1992 சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு திருமதி சி. காசிப்பிள்ளையின் அன்புமகனும், திருமதி கலாதேவி (ஆசிரியை, யா/ சதானந்தா வித்தியாலயம், அளவெட்டி) யின் அன்புக்கணவரும், சோபனா, அனுஷன் (மாணவர்கள், யா/அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), தர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. திருமதி த. நாகலிங்கத்தின் அன்பு மருமகனும், செல்வி சிவஞானஈஸ்வரி, திருமதி இரத்தினம்மா நாகரத்தினம், திரு. கா. சிவராஜா (அதிபர். யா/ தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), திருமதி மனோன்மணி, சத்தியசீலன் திரு, கா சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திரு. நா. பரமானந்தம் (கணக்காளர், சிஹிரி வீவிங் மில்ஸ் கொழும்பு), திரு. நா. பிரணவருபன் (மாணவன் யாழ்/ பல்கலைக்கழகம், வர்த்தகப்பிரிவு 3 ஆம் வருடம்) திரு நாகரத்தினம் (கிராமசேவையாளர்-வட்டு தெற்கு), திருமதி கிருபாமலர் சிவராஜா, திரு. சத்தியசீலன் (ஆசிரியர் யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி), திருமதி உஷாதேவி சிவகுமாரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (06-09-92) ஞாயிறு காலை 10-00 மணிக்கு திரு. சத்தியசீலன் ஆசிரியர் சுதுமலை வடக்கு, மானிப்பாய் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி கலாதேவி கந்தசாமி
(மனைவி)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(22439)

## வல்லிபுரம் முத்துக்குமாரு

புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 4ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், தற்போது பலாலி வீதி, 7ஆம் ஒழுங்கை திருநெல்வேலியில் வசித்துவந்தவருமாகிய வல்லிபுரம் முத்துக்குமாரு அகால மரணமடைந்துவிட்டார். அன்னார் கனகம்மாவின் அன்புக் கணவரும், செல்வராணி (சுவிஸ்), வசந்தி, விக்கினேஸ்வரன் (சுவிஸ்) வசந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரபாலனின் (சுவிஸ்) அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான தம்பு, பாக்கியம் அவர்களின் மருமகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் கணபதிப்பிள்ளை, சின்னத்தம்பி, சிவசம்பு, கண்மணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

ஈமக்கிரியை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று காலை 10 மணிக்கு கொக்குவில் இந்து மாயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சண்முகலிங்கம்

315/2 பலாலி வீதி,
7ஆம் ஒழுங்கை,
திருநெல்வேலி.

(22443)

# இலங்கை தோல்வி

கொழும்பு, செப். 6

கொழும்பு, கெத்தாராம விளையாட்டரங்கில் நேற்றுப் பகலும் நேற்றிரவும் நடைபெற்ற மூன்றாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியிடம் இலங்கை அணி தோற்றுப் போனது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றது; ஆஸி அணி 47.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது.

ஏற்கனவே நடைபெற்று முடிந்த முதலாவது, இரண்டாவது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் ஆட்டங்களில் இலங்கை அணியே வெற்றியீட்டியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

# தக்காளி இனம்

யாழ்ப்பாணம், செப். 6

வரட்சியைத் தாங்கக்கூடிய தக்காளி இனம் மி 146. இதனை விவசாயிகள் பயிரிடுவதன் மூலம் சிறந்த பலனைப் பெறமுடியும்.

இப்படி யாழ்ப்பாணம் உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# தடுப்பூசி

தென்மராட்சி, செப். 6

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

9ஆம் திகதி — மீசாலை மதுவன் சனசமூக நிலையம்.

12ஆம் திகதி— சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்.

22ஆம் திகதி — கலைமகள் சனசமூக நிலையம், கல்வயல்.

[ஒ-117]

# வெள்ளத்துக்கு 30 பேர் பலி

பிலிப்பைன்ஸில் கடும் மழை, வெள்ளம் காரணமாக இந்த வாரத்தில் 30 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கடந்த வருடம் வெடித்த பினாதுபோ எரிமலையிலிருந்து வெளியேற்றப்பட்ட பெருமளவு சேறு மழை வெள்ளத்தால் கரைக்கப்பட்டு பல கிராமங்களுக்குப் பரவியுள்ளதாகவும் —

குடியிருப்புகள், வயல்கள் சேற்றினால் மூடப்பட்டுக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

# நிதியமைச்சில் மோசடியாம்

கொழும்பு, செப். 6

நிதியமைச்சில் வரி விலக்கு அளிக்கும் அனுமதி தொடர்பாக இடம்பெற்ற மோசடியை உலக வங்கி கண்டுபிடித்து கண்டித்துள்ளது.

'ராவய' பத்திரிகை இச்செய்தியை வெளியிட்டுள்ளது.

ஆனால் இச்செய்தியை இலங்கையிலுள்ள உலகவங்கியின் பிரதிநிதி மறுத்துள்ளதாக இலங்கை வானொலி நேற்று அறிவித்தது. (த)

# தமிழகத்திலிருந்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அகதிகள் சுயவிருப்பத்தின் பேரில் தாயகம் திரும்புகிறார்களா என்பதை இராமேஸ்வரத்துக்குச் சென்று அறிந்து கொள்ள ஐ. நா. அகதிகளுக்கான தூதரக அதிகாரிகள் முயற்சித்தனர் என்றும்—

அவர்கள் அங்கு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்தே கப்பல் மூலம் அகதிகளை அனுப்பும் நடவடிக்கையும் முடங்கிப் போனது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ஒ]

# பாடசாலைப் பிரச்சினை: ஆராய்வதற்கு ஏற்பாடு

பாடசாலைகளின் நடைமுறைப் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்வதற்கான கலந்துரையாடல்கள் கல்விக் கோட்ட மட்டத்தில் நாளை முதல் நடைபெறவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல்களில் கொத்தணி அதிபர்களும், அதிபர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளை திங்கட்கிழமை பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் காலை 10.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறும். மருதனார்மடம் கல்விக் கோட்டத்துக்குரிய கலந்துரையாடல் பிற்பகல் 2.00 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடக்கும்.

செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தென்மராட்சிக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் றிபேக் கல்லூரியிலும், பிற்பகல் 2.00 மணிக்கு வடமராட்சிக் கோட்டத்துக்கான கலந்துரையாடல் வேலாயுதம் மகாவித்தியாலயத்திலும் நடைபெறும்.

யாழ். கோட்டத்துக்குரிய கலந்துரையாடல் புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு சாதனா பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். (அ)

# 'ஹெல்மெட்' அணிந்து கொண்டு ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஓட வேண்டி வந்தது ஏன்?

## அனுரா கூறும் விளக்கம்

அரசு விட்ட பிழைகளால் தான் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கனத்தை மயானத்தில் "ஹெல்மெட்" அணிந்து கொண்டு மக்களின் கோபாவேசத்திலிருந்து தப்பியோட வேண்டி ஏற்பட்டது.

—இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டாரநாயக்கா கூறினார்.

கடந்தவாரம் வாரியப்பொலவில் நடைபெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கொப்பேகடுவ உட்பட இறந்த இராணுவ அதிகாரிகளை அரசு கௌரவிக்கவில்லை. கனத்தைச் சம்பவங்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சூழ்ச்சியே காரணம் என இன்று அரச தரப்பில் கூறப்படுகிறது. மக்களின் குரலுக்கு அரசு செவிசாய்க்காததாலேயே மக்கள் கோபாவேசமுற்றார்கள் — எனக் கூறினார். [உ-10]

# வலி. வடக்கு, வலி. மேற்கிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் நெருக்கடியான நிலையில்

வலி - வடக்கு, வலி-மேற்கு பகுதிகளில் கடந்த 20 ஆம், 21 ஆம் திகதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து இடம்பெயர்ந்த மக்கள் பெரும் கஷ்டத்துடன் காலத்தைக் கழிக்கின்றனர்.

போதிய உணவு, சுகாதார, இருப்பிட வசதி இன்றி அவர்கள் பெரும் அல்லல்படுகின்றனர்.

இடம்பெயர்ந்த 5 ஆயிரத்து 934 குடும்பங்கள் முகாம்களிலும், 14 ஆயிரம் குடும்பங்கள் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியுள்ளன என்று பிந்திய கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

சங்கானை உதவி அரச அதிபர் பிரிவில் ஆயிரத்து 195 குடும்பங்கள் 14 முகாம்களிலும்—

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் மூவாயிரத்து 146 குடும்பங்கள் 17 முகாம்களிலும்—

உடுவில் உதவி அரச அதிபர் பிரிவில் ஆயிரத்து 343 குடும்பங்கள் 13 முகாம்களிலும்—

கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவில் 253 குடும்பங்கள் 4 முகாம்களிலும் தங்கியுள்ளன. (ஒ-3)

# அணிசேரா நாடுகளின் மாநாடு இன்று பூர்த்தி

## 109 நாடுகள் பங்குபற்றின

அணிசேரா நாடுகளின் 6 ஆவது உச்சிமாநாடு இன்று இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் நிறைவு பெறுகிறது.

109 நாடுகள் கலந்து கொண்ட இம்மாநாட்டில் 60க்கும் மேற்பட்ட அரசத் தலைவர்கள் பங்குபற்றினர்.

எனினும் அணிசேரா நாடுகள் அமைப்பின் தூண்கள் என முன்னர் கருதப்பட்ட கியூபா, ஈராக், லிபியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் இம்முறை மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை.

அணிசேரா நாடுகள் அமைப்பின் ஸ்தாபக நாடுகளில் ஒன்றான யூகோஸ்லாவியா பல குடியரசுகளாகப் பிரிந்ததன் காரணமாக இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்று நிறைவுபெறும் மாநாட்டின் இறுதியில் வெளியிடப்படும் தீர்மானங்களில் அரசியல் பிரச்சினைகளை விட பொருளாதாரப் பிரச்சினைகளே முக்கிய இடம்பெறும் என அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். [உ-10]


# தேன் சுரபி

சைவ உணவகம்

"மதிய உணவு"

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களுக்கு விசேட சலுகையுண்டு.

பலாலி றோட்,
திருநெல்வேலிச் சந்தி.

(சி-3207)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org